58

பதிவு எண்—M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

5-இலை தருதலம், மாம்பாக்கம்; நந்தன, பங்குனி; 27—3—53 துளிர்-26

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

அறத்தின் வெயில்

வான வெளியில் பகலவன் வெயில் இயற்கையில் இருக்கின்றது. அழுக்குகளை எரிப்பது அதன் இயல்பு. உலகத்தில் பருமை நிலையில் அவ்வெயில் இருப்பதுபோல, உயிர்த்திறத்திலும் நுட்ப நிலையில் அறக்கதிர் உள்ளது. புறக்கதிரோனைப்போல் அந்த அறக்கதிரோனும் உயிர்களைப் படிந்த மாசுகளையும் எரித்து விடுகின்றது.

அறக்கதிரவன் உணர்வு வெளியில் இவ்வாறு இருக்கும் உண்மையைப் பலர் அறிவதில்லை. புறக்கதிரவன் அழுக்குகளைக் காய்வதோடு ஒளியும் கொடுப்பதுபோல், அறக்கதிரவனும் உயிரின் அழுக்குகளைக் காய்வதோடு அருள் ஒளியும் வழங்குகின்றது.

எலும்பில்லாத உடம்புகள், புழு உடம்பு போல்வன; வெயில் பட்டவுடன், வெயில் ஒளிக்குமுன் நிற்கும் வன்மை இல்லாமல் அவை காய்ந்து போகின்றன. அவற்றின் உள்ளே எலும்பு இருந்தால் வெயிலைத் தாங்கும் வன்மை அவற்றிற்கு இருக்கும்; வெயிலால் அவை நலமும் பெறும். அவ்வாறே அறக்கதிரின் எதிரில், அன்பில்லாத உயிர்களுக்குத் தாங்கும் வன்மை இல்லை. அன்பு இருந்தால் அந்த ஈரப் பண்பு அறத்தின் வெயிலைத் தாங்கி நிற்கும். நலமும் பெறும்!

அறவெயில் காய்வது அழுக்குகளையே, அன்பை அன்று; அன்பு ஓர் அழுக்கன்று, அறத்தின் ஒளியை ஏற்று, அது தழைக்கும் வல்லமை உடையது.

'அறம்' என்று இங்கே கூறியது எல்லாம் வல்ல இறைவனது திருவருளில் ஒரு வெம்மைப் பகுதி. அதன் தண்மைப் பகுதியே 'அருள்' என்பது. அது குளிர் நிலவை ஒத்தது.

வாழ்க்கையில் 'அறம்' என்பது மலமாசுகளை அழிக்[illegible] 'அருள்' என்பது அன்பைத் தழைப்பிக்கவும் உதவுகின்ற[illegible]

என்பி லதனை வெயில்போலக்
காயுமே
அன்பி லதனை அறம்.

என்பு இலதனை—எலும்பு இல்லாததனை; வெயில் போல—கதிரோன் வெயிலைப் போல; அன்பு இலதனை அறம் காயுமே—அன்பு இல்லாததனை அறம் என்னும் முறைமை எரிக்குமே!

என்பிலது, அன்பிலது என்பன முறையே அவை இல்லாத உடம்பையும், உயிரையும் குறித்தன. 'என்பில்லாத உடம்பை' 'அன்பில்லாத உயிரை' என்று பொருள்படும்.

வெயில் எல்லாவற்றிற்கும் பொது; இருந்தும், எலும்பில்லாதது மட்டும் வெயிலில் கெடுதற்குக் காரணம், அதன் இயல்பு. அவ்வாறே, அறமும் பொதுவாயினும் அன்பில்லாத காரணத்தால் அஃதில்லாத உயிரும் ஒறுக்கப்படுதல் அதன் இயல்பு. ஈகாரம் இரக்கம் பயந்தது. இயற்கை [illegible] என்றதற்கு வெயில் உவமை [illegible]

—:○●○:—

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
5-ம் ஆண்டுக் கையொப்பம்
(3-10-52 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்— கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	நந்தன, பங்குனி,	தளிர்
5	27-3-53 வெள்ளி	26

உரிமை வேட்கை

எல்லாருக்கும் இந்த வேட்கை இயல்பாகவே உள்ளது. கட்டுப்பாட்டு நிகழ்ச்சிகளும் உரிமை வேட்கைக்கு ஊறு இல்லாமலே நடைபெற வேண்டும். இல்லையானால் அடக்கு முறையென்று அவை பெயர் வாங்கும்.

உரிமை வேட்கையைத் தடுத்து அடக்கினால், மாந்தர் உணர்வு செழிக்காது; மங்கிச் சாம்பும். உணர்வு முன்னேற்றம் அதனால் குறைந்து, நாகரிகம் தாழ்ந்து, விலங்கு வாழ்வாய் உலகம் நிலைகுலையும்.

இயற்கை வளர்ச்சியிலேயே, அதற்குத் தடுப்பும் ஊறும் இல்லாதபடி மாந்தர் நினைவுகள் உலாவித் தளிர்க்கவேண்டும். உரிமைகளை அறிவித்து, அவற்றில் மக்களை வேட்கை கொள்ளுமாறு செய்து, அதற்கான செய்கைகளில் இறங்கித் திளைக்கும்படி மக்களை வளர்த்து வருவதுதான் முறைமை! குடும்பத்திற்கும் நாட்டுக்கும் இக் கடமைகள் உண்டு.

குடும்பப் பெரியோரும் நாட்டின் அரசினரும் இந்த இயற்கை முறையில் வழுவினால், அவர்கள் மக்களுக்கு நலம் செய்வோர் ஆகமாட்டார்கள். அயல் குடும்பமும் அயல் அரசும் கூட இக் கடமைகட்கு விலக்கல்ல. ஆனால், அவற்றினிடத்தில் முற்றும் நன்மையாக எதிர்பார்ப்பது இயலாமற் போகலாம்.

ஒரு நாட்டிற்கு அதன் மக்களே அடிப்படைச் செல்வம்! உரிமை வேட்கையும் கடமை நிகழ்ச்சியும் அம் மக்கள் உடையவர்களானால், அவர்களை ஆற்றலானவர்கள் என்று மதிக்கலாம். மக்கள் ஆற்றலுடையவர்களாக இருந்தால், உரிமையும் கடமையும் மேன்மேலும் நன்றாக வளர்ந்து நடந்துவரும்.

தாய் மொழியையே முதலில் உரிமை கடமை உணர்வுகளோடு அவர்கள் போற்றுவர். தாய் மொழி உலவும் இடங்களை ஒரு வரையறை செய்து எல்லைகள் கோலி நாட்டை அமைப்பர்; அரசையும் செழிக்கச் செய்வர். அதன் பின், அந் நாட்டுக்குத் தேவையான எல்லா வாழ்க்கைச் சீர்திருத்தங்களையும் படிப் படியாக அமைத்துக் கொள்வர். நாட்டைப் பிறர் ஆதிக்கம் வவ்வி விடாதபடி காத்துக் கொள்ளுதலும் செய்வர்.

உரிமை வேட்கை, தக்க கடமை நிகழ்ச்சிகளுக்கும் இடம் செய்து இங்ஙனமெல்லாம் மக்களை வாழ்விக்கும். இயற்கையான இந் நெறி, உலக நாடுகள் எல்லாவற்றினும் தழைப்பது நல்லது! பசியும் பிணியும் பகையும் இன்றி மன்பதை நலமுறும்.

உலகத்தில் மேலளவில் நோக்கும்போது, இயற்கை எல்லைகளால் பெரும்பாலும் நாடுகள் பிரிவுபட்டிருத்தலைக் காணலாம். நமது இந்திய நாட்டை அடுத்த இலங்கை என்னும் ஒரு சிறு தீவு இங்ஙனம் இயற்கையாற் பிரிவு பட்ட ஒரு நாடு. நாலாபக்கமும் கடல் சூழ்ந்து இந்தியப் பகுதியிலிருந்து இயல்பாகவே பிரிக்கப் பட்டுள்ளது. இதற்கு மாறாக, இலங்கையும் இந்தியாவின் தென் கோடியிலுள்ள திருநெல்வேலிக் கோட்டமும் சேர்ந்து ஒரு நாடு என்று பிணைத்து வழங்க முற்பட்டால், அது பல சிக்கல்களுக்கு இடமாகும் என்பது தெளிவு. அப்படியே ஆத்திரேலியா அமெரிக்கா முதலான பெரிய நிலப் பிரிவுகளும் இயற்கைப் பிரிப்புடன் அமைந்த நாடுகளாய்த் தனித் தனியே விளங்குதல், சிக்கல் இல்லாத நிலையாம்.

இனி, தெளிவான கடல் வரையறை இல்லாத நாடுகள், பெரிய மலை வரையறைகளாவது கொண்டு, இயற்கைப் பிரிப்புடன் அமைதல் பொருத்தமானது. உலகிலேயே பெரிய இமய மலையை இயற்கை எல்லையாகக் கொண்டு இந்திய நாடு பிரிக்கப் பட்டிருப்பது ஏற்றதொன்று. ஒரு பெரிய கண்டத்தில் இத்தகைய நாட்டுப் பிரிப்புகள் இயற்கையானவை.

இனி, ஒரு நாட்டின் உட்பிரிப்புகளாக அமையத் தகுந்தவற்றிற்கும், கூடியவரையில் இயற்கை வரையறைகள் அமைதலே தகுதியானது. ஆறுகளையும் மலைகளையும் எல்லைகளாகக் கொண்டு இவ்வாறு உட்பிரிவுகள் அமையலாம். வடவேங்கட மலையை வடக்கு எல்லையாகவும், தென்குமரி முனையைத் தெற்கு எல்லையாகவும் கொண்டு தமிழ்நாட்டு எல்லையை முன்னோர் வகுத்த இயற்கை அமைதி சிறந்ததே. தற்காலத் தமிழகம் இச் சிறப்புக்கு எடுத்துக்காட்டு.

இங்ஙனமெல்லாம் எல்லைகள் இயற்கை வரையறையில் அமையப் பெறாத நாடுகளும் உள்ளனவாயினும், அவை இயற்கை வலிமை அற்றனவாய் உள்ளன. மொழி வழக்கு, அரசு அமைப்பு, மன்பதைப் பிரிவு முதலியன இந்த இயற்கை அடிப்படையில் அமைந்து வளர்ந்து வந்தால் வாழ்வு சிக்கலில்லாமல் இருக்கும் அப்படி அமைந்த நாடுகளை உரிமை வேட்கையோடும் கடமைச் செயல்களோடும் அந்தந்த மக்கள் ஆற்றலுடன் நடத்திக் கொள்ளவேண்டும். மொழி வெறி, ஆட்சி வெறி, இன வெறி முதலிய எவ்வகை வெறிகளும் இல்லாமல் அந்த நாடு அந்த நிலையில் இயங்கி வந்தால் மன்பதைக்கு ஒரு குறைவும் இல்லை.

ஆனால் இயற்கையின் நிகழ்ச்சிகள் சில அவ்வாறு இருக்கவிடா. சிற்சில தலைவர்களிலும் பொதுமக்களிலும் வெறி கொள்ளச் செய்து பிற இடங்களின்மேல் தம் ஆதிக்கங்களைப் பாவச் செய்யும் என்றும், உலகியலில் அது தவிர்க்க முடியாதது என்றும் துணிவதும் உண்டு. இங்கே நன்கு கவனிக்கத் தக்கது ஒன்று உண்டு.

இயற்கை என்பதில் தீய இயற்கையும் உண்டு, நல் இயற்கையும் உண்டு. நல் இயற்கையால் தீய இயற்கையைக் குறைத்து ஒடுக்குவது உலக வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை ஒப்புக் கொள்வோருக்குப் பிறர் ஆதிக்கத்தின் தீமை ஒடுக்கத்தக்கது என்பதே துணியப்படும். அந்த ஆதிக்கத்தை இயல்பென்று ஏற்று அதன் வழியாகத் தாம் திரிந்து சிதைந்து நிலைகெட்டு அதன் வண்ணம் ஆதலே தக்கதென்று துணியப்படாது. இந்த நிலையிலேதான் உரிமை வேட்கையின் இன்றியமையாமை தெள்ளெனப் புலப்படும். கடமைச் செய்கையின் கட்டாயமும் இனிது தெளியப் பெறும்.

நமது இந்திய நாட்டில் தமிழகம் மிகவும் தொன்மையானது. அதன் மொழியும் அதன் எல்லைகளும் இயற்கைச் சிறப்பு அமைந்தவை. அதன் ஆட்சியும் பண்பும் மாட்சிமையானவை. மிக நீண்டகால மிக அழகிய நாகரிக நலமும் வாய்ந்தது.

இவ்வளவு அழகும், அமைதியும், தொன்மையும், வன்மையும் வாய்ந்த தமிழகம் அதன் இயல்புகளோடு நிகழ்வது எவ்வளவு நல்லது. அயலவர் குடியேற்றத்தாலும் அயல் மொழிப் பெருக்கத்தாலும், அயலவர் அயலரசு ஆதிக்கங்களாலும், அவை எக் காரணங் கொண்டு நேர்வனவே ஆயினும், நலிந்து சிதைந்து உருமாறிக் கரைந்து அவ்வயல் நிலைகளோடு ஒன்றாய் விடுதல் நல்லதாகுமா? ஒற்றுமை என்பதற்கும் வலிமை என்பதற்கும் கூட்டு ஆட்சி என்பதற்கும் இதுதானா பொருள்? பிரிவுகளை உள்ளடக்கி அவை அழகாக இயங்கச் செய்து அவ்வவற்றின் திறங்களைச் சுவைத்து இன்புறும் ஆழ்ந்த உணர்விலன்றோ, ஒற்றுமையும் வலிமையும் கூட்டு ஆட்சியும் அமைந்து அழகு பெறும்!

உலக அறிஞர்களென்று இக்காலத்தில் கருதப்படுவோர் சிலரும் இந்த இயற்கை நெறியிலிருந்து வழுவுகின்றனர் என்றால், நல்லியற்கையை மதியாத இந்தப் போக்கு மன்பதைக்கு எவ்வளவு ஊறு தரும்!

தமிழகமும், நல்லியற்கையை ஓம்பும் பெரு நெறி கடைப்பிடித்து உரிமை வேட்கை மீதூர்ந்து உரிய கடமைகளில் முனைந்து அழகிய வாழ்வில் வாழ விழிப்படைந்து உயர்வதாக!

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

அருள் துறை

* நெஞ்சு விடு தூது *

(முத்தசாமி)

பாசத் தாக்குதல்:

"வயிரமே.........மயங்கினேன்"

மிக்க பலம் பொருந்திய காமம் கோபம், மோகம், மதம், மாத்சரியம், லோபம் என்னும் ஆறு குற்றங்களுக்கும், மிக்க வலிமை பொருந்திய பத்து இந்திரியங்களுக்கும், பத்து மாத்திரைக்கும், ஈறில்லாத ஐந்து பூதங்களுக்கும், சித்தையைக் கவரும் மூன்று குற்றத்திற்கும், மூன்று குணத்திற்கும், மூன்று மலத்திற்கும், மூன்று அவத்தைக்கும், இவை ஏற்றுச் செய்யும் இரு வினைக்கும், காட்சிக்குத் தோன்றாத பத்து வாயுக்களுக்கும், செய்வினைக்கு மாறாகாது அமைந்த சுற்றத்துக்கும், அரிதில் தேடிச் சேர்க்கும் வைப்பு நிதிக்கும் நேயமாய் அன்பு பூண்டு அவற்றிற்கு ஏற்ப இச்சை கிரியை இவைகள் தாங்கி எண்ணியளவிட முடியாதபடி பயமும் கொடுமையும் பூண்டு பாம்பை அரையில் கட்டிய பரமனுடைய நிலையில் நில்லாது பல் கருவிகளின் கட்டில் அகப்பட்டு மயங்கினேன்.

ஈண்டு நூலில் காமம் முதலாக ஐந்து குற்றங்களே கூறினார். அவற்றின் வரிசையில் சொல்லப்படும் ஆறுவதாகிய லோபம் என்னும் குற்றத்தையும் உடன் சேர்த்துக் கொள்வார்கள் என்று. இவ்வாறு செய்யுளில் இடமில்லையாயின் தொகையாகச் சொல்லுமவற்றில் சில விட்டுவிடுவர். பொருள் செய்யும் நாம் விடுபட்டவற்றையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

காமம்—வெறும் உடற் சேர்க்கையாகிய இன்பம். இவ்வெண்ணம் தோன்றுமாறு செய்யும் அதிதேவன் காமன் அல்லது மன்மதன் என்போன். இவன் கந்தர்வர்களில் ஒருவன். சிலர் காமன் என்று ஒருவன் இல்லையென்று காமம் என்ற குணத்தையே உருவகித்துக் கூறுவதாகச் சொல்வர். அது தவறு. மோகம்—ஒன்றன் மேலுள்ள தீவிர ஆசை; மதம்—அளவுக்குமேல் துய்த்தலினால் உண்டாம் வெறி, திமிர். இதனைத் திருவள்ளுவர் செருக்கு என்றார். பரிமேலழகர் அதற்குச் செல்வக் களிப்பு என்று உரை செய்தார். மாத்சரியம்—பொறாமை, அதாவது பிறர் ஆக்கங் கண்டு கறுவும் எண்ணம். லோபம்—பொருள் இருந்தும் கடமைகளைச் செய்ய மனம் வாராமை. இதனைத் திருவள்ளுவர் 'பற்றுள்ளம்' என்னும் இவறன்மை' என்றார்.

காமம் முதலிய இவையாறும் மலச் சேர்க்கையால் நம்மிடம் உள்ள குற்றங்கள். இவைகளை நாம் எளிதில் போக்கிக்கொள்ள முடியாது. அருளுதவி யிருந்தால் மட்டுமே இவற்றைப் போக்கிக் கொள்ள முடியும். இக் குற்றங்களால் நாம் கெடுவதேயுமன்றி நம் பின் சந்ததியையும் கெடுத்தவராவோம். நமக்குப் பின் ஏழு சந்ததி வரை நாம் செய்யும் குற்றங்கள் தாக்கும். நாம் ஒருவர் நல்லவராக ஆகிவிட்டால் நம் முன் ஏழு பின்

நஞ்சன்கூடு பல்பொடி

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,

54; பந்தர்த் தெரு, :: சென்னை-1

எழு பிறவியிலுள்ளாரும் அவரவர் சுற்றத்தாரும் நம் சுற்றத்தாருமாகிய அத்தனை பேரும் நன்மை யடைவர்.

இந்திரியம் — இயங்குதற்கு உதவு கருவி யென்று பொருள் படுவது. இதன் மூலம், 'இயங்கு' என்று இருக்கலாம். அப்படியாயின் இதனைத் தமிழ்ச்சொல் எனலாம். இதனை இயந்திரம் என்று வழங்குவதால் அவ்வாறு கொள்ள இடந் தருகிறது.

இந்திரியம் பத்தாவன:

ஞானேந்திரியம் ஐந்தும் கன்மேந்திரியம் ஐந்தும்; ஞானேந்திரியம் ஐந்தாவன: மெய், வாய், கண், மூக்கு, செவி. கன்மேந்திரியம் ஐந்தாவன: கை, கால், வாய், எருவாய், கருவாய். இவற்றை வட மொழியில் பாணி, பாதம், வாக்கு, பாயுரு, உபத்தம் என்ப. பத்து மாத்திரைகளாவன: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பனவும், இடல், நடை, பேச்சு, எருவிடல் கருவிடல் என்பனவுமாம். ஐந்து பூதங்களாவன: மண், நீர், தீ, வளி, வெளி. பூதம்— பருப்பொருள். [மூன்று குற்றங்களாவன: முன்னே சொன்ன ஆறையும், மூன்றில் அடக்கிக் கூறும் வழக்கப்படி காமம் வெகுளி மயக்கம் என்பர்.] இனி, குற்றங்கள் வரும் வழியை நோக்கியும் மூன்றாகக் கூறுப. அவையாவன: பருப்பொருள்களால் (பூதம்) வரும் குற்றம், பிற உயிர்களால் வரும் குற்றம், தெய்வத்தால் வரும் குற்றம் என்பனவாம். இவற்றை முறையே வடமொழியில் பௌதிகம், ஆத்மிகம், தைவிகம் என்ப. இக் குற்றங்கள் அநாதியல்ல. இடையில் வருபவை, ஆதலால் இவற்றிற்குத் தோற்றமுண்டு எனற் பொருட்டு ஆதி சேர்த்து ஆதி பௌதிகம், ஆதியாத்மிகம், ஆதி தைவிகம் எனவுங் கூறுப.

மூன்று குணங்களாவன:

சாத்விகம், ராசசம், தாமதம்; (இம் மூன்று குணங்களின் பெயர்களையும் முறையே நன்மை, எழுச்சி, மயல் என்று தமிழ்ப்படுத்தியிருக்கின்றனர் ஆசிரியர் மறைமலை யடிகள்.) இவை உயிரின் குணங்களல்ல. உயிரின் குணங்கள் அறிவு அன்பு முதலியவை. இக் குணங்கள் பண்டங்களின் சேர்க்கையால் வருவன. ஆகவே, பண்டங்களின் தன்மையென அறிக. இம் மூன்று குணங்களும் இறைவனுக்கு இல்லை. ஆதலால் அவனை நிர்க்குணன் என்ப.

மூன்று மலமாவன:

ஆணவம், கன்மம் மாயை.

மூன்று அவத்தைகளாவன:

கேவல சகல சுத்தம். அவத்தை — நிலை; கேவல நிலை— ஆன்மா கருவிகளோடு கூடாது தூங்கும் நிலை போன்றதொரு அறிவு விளங்காத நிலை. சகல நிலை— கருவிகளோடு சேர்ந்து அறிவு வளர்ச்சி பெறும் நிலை. சுத்த நிலை — கருவிகள் இணங்கிய தூய நிலை.

இருவினையாவன:

நல்வினை, தீவினை; இவற்றைப் புண்ணியம் என்றும் பாவம் என்றும் கூறுப. இருவினையும் ஒழித்தற்பாலன வெனின், நல்வினையும் ஒழித்தற் பாலனவே யென்பதறிக. நல்வினையும் பிறவியுள் புகுவிப்பதால் பிறப்பறுக்கலுற்றார்க்கு அவையும் வேண்டுவதில்லை.

பத்து வாயுக்களாவன:

பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்பன.

நம் வினைக்குத் தகச் சுற்றம் வாய்ப்பதால் 'வல்வினையே யாய சுற்றம்' என்றார்.

அரிதில் முயன்று சேர்க்கும் நிதி யென்பார், 'அரு நிதி' என்றார். நிதி—சேமிப்பு அல்லது வைப்பு.

இறைவனிடம் அன்பு வைத்துத் தம் இச்சை கிரியைகளை அதற்கு ஏற்ப அமைத்துக் கொள்ளாமல் மேற் கூறிய பாசப் பொருள்களுக்கு வைத்தால், எதற்கெடுத்தாலும் அஞ்சுந் தன்மையும் கொடுமைத் தன்மையுந்தான் தோன்றுமே யன்றித் தெளிவும் நேர்மையுந் தோன்றா. ஆதலால் கச்சரவன் சீரில் நிலைநில்லாது இவற்றின் தாக்குதலில் அகப்பட்டு மயங்கினேன் என்றார்.

—:○●○:—

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

பணித் துறை

கீதை

(பா. வ.)

தியானம்

கண்ணன்:

செயலின் விளைவைக் கருதாது, கடமையால் உந்தப் பெற்றுச் செயலைச் செய்பவன் துறவி. அவனே யோகி. தன்னடக்கமும், அமைதியும் கொண்டவனது உயர்ந்த ஆன்மா தட்ப வெப்பத்திலும், இன்ப துன்பத்திலும், புகழ்ச்சியிலும் இகழ்ச்சியிலும் சமநிலையுடையது. அன்பர்களையும், நண்பர்களையும், அயலாரையும் மாற்றவரையும், அணுக்கமானவர்களையும், நடுவு நிலையிலுள்ளவர்களையும், உறவினரையும், ஒழுக்கமுள்ளவர்களையும், ஒழுங்கீனர்களையும், துலைனாப்போல் சார்பு கருதாது மதிப்பவனே உன்னத நிலைக்குப் போகின்றான்.

யோகி, உள்ளமும் நினைவும் ஒடுங்கி, பயன் கோடல் பேரவா முதலியவற்றினின்றும் விடுபட்டு ஒதுக்கிடத்தே அமர்ந்து இடைவிடாது தியானத்தில் திளைப்பானாக. நினைவும் புலன்களின் செயல்களும் ஒடுங்கி, தன் இருக்கையில் நிலைபெற்றுச் சித்தத்தை அப் பரம்பொருள் நினைவாக நிறுத்தி, ஆன்மா தூய்மையின் பொருட்டுத் தியானம் பழக வேண்டும்.

அளவு கடந்து உண்பவனுக்கும், வரம்பு கடந்து பட்டினி இருப்போனுக்கும், அதிக உறக்கங் கொள்வோனுக்கும், உறக்கத்தை அளவு கடந்து வெறுப்போனுக்கும் யோகம் கை கூடாது. உணவிலும், இன்பம் துய்ப்பதிலும் செயலிலும் உறக்கத்திலும் விழிப்பிலும் ஓர் அளவுக்கு ஒழுங்கு கொண்டவர்களின் எல்லாத் துன்பங்களையும் தியானம் அழிக்கின்றது.

காற்றலைவு கொள்ளாத அமைதியான இடத்தே உள்ள விளக்கு எவ்விதம் அலைவு கொள்ளாதோ அவ்விதமே, தியானிப்போனின் அடங்கிய எண்ணங்களும் ஆன்மாவுடன் ஐக்கியப்பட்டு இருக்கும்.

துன்பத்தின் இணைப்பிலிருந்து விடுபடுவதுதான் யோகமென்பதை உணர வேண்டும். இந்த யோகமே, உறுதியுடனும், நிலைத்த உள்ளத்துடனும் பற்றப்பட வேண்டியது.

பார்த்தன்:

சமநிலையால் கை வருவதென்று, உம்மால் அறிவுறுத்தப்படும் இந்த யோகத்திற்கு, ஓர் உறுதியான கால்கோள் இருப்பதாக என்னால் அறியக் கூடவில்லை, காரணம், மனம் எவ்வாற்றானும் அமைதி உறாததனால். பெரியோய்! உண்மையாகவே, மனம் மிகவும் அமைதி அற்றது. பெரும் புயலைப் போல் வேகமுள்ளது. வன்மையானது, ஒடுக்க முடியாதது. அதைக் காற்றைப்போல் அடக்கி ஆளக் கூடாத ஒன்றாகவே நான் கருதுகிறேன்.

கண்ணன்:

மனம் அமைதி அற்றதென்பதும், அடக்கி ஆள முடியாத வன்மையுடையதென்பதும் உண்மை. அதில் ஐயமில்லை. ஆனால் அதை இடைவிடாப் பழக்கத்தாலும், அவாவின்மையாலும் அடக்க முடியும்.

பார்த்தன்:

ஓ கிருஷ்ணா! நம்பிக்கை உள்ளவனும், ஆயினும் மனதை அடக்க முடியாதவனும், தியானிப்பதினின்றும் விலகி அத் தியானத்தின் முழுமையடையாது இருப்பவனும் எந் நெறியில் செல்கின்றான்?

கண்ணன்:

இவ்வுலகத்திலேயே அன்றி, இனி வரவிருக்கும் வாழ்விலும் அவனுக்கு அழிவு இல்லை. சில செயலை மேற் கொண்டவன் எப்போதும் துன்பப் பாதையைப் பற்றியதில்லை.

யோகத்தால் தூய்மை அடைந்தோர் சாரூபமாகிய பத முக்தியைப் பெறுவர். அந் நிலையில் கணக்கற்ற ஆண்டுகள் கழிந்த பிறகும், ஒருவன் யோகநெறியினின்று வீழ்ச்சியுற்றால் பின்னும் நன்மையும் தூய்மையும் கொண்டோர் வீட்டில் பிறக்கின்றான். ஒரு ஞானியின் குடும்பத்திலும் பிறக்கலாம். ஆனால் அத்தகைய ஒரு பிறவியை இவ்வுலகில் அடைவது மெத்தக் கடினம்.

துறவியைப் பார்க்கினும் யோகி சிறந்தவன். அறிவுடையோனினும் மேலானவன். செயலீடுபடுவோரனைவரினும் உயர்ந்தோனாவான். ஆகவே, பார்த்தா! நீயும் தியானியாக முயல்வாயாக!

குருகுலச் செய்தி

யாம் கண்ட நல்லோர்

(முன் தொடர்ச்சி)

ஒரு காலத்தில் ஊர் முழுவதும் கோயில் சொத்தாக இருந்ததாகவும் இப்போது ஒன்றும் இல்லை என்றும் குருக்கள் கூறுகிறார். ஏதோ பெயரளவில் அவர் பூசித்து வருகிறாரே தவிர, அக் கோயில் பாழ்பட்ட நிலையிலேயே இருக்கிறது. தொண்டை மண்டல யாத்திரையில் யாம் கண்ட கோயில்களில் மிகவும் இழிந்த நிலையில் இருந்தது இந்தக் கோயிலே ஆகும்.

புதிது புதிதாகக் கோயில்களைக் கட்டுவதை விட, பெரிய பெரிய கோயில்களில் பெயருக்காகப் பெரும் பொருள் செலவிட்டு ஆரவாரமான விழாக்கள் செய்வதைவிட இத்தகைய சிறிய பாடல் பெற்ற திருக்கோயில்களைச் செம்மைப் படுத்தி வைப்பதுதான் மிக்க சிவபுண்ணியச் செயலாகும். செல்வர்களும் செல்வாக்குள்ள தக்கவர்களும் இதைக் கவனிப்பார்களாக!

குரங்கணின் முட்ட வழிபாடு 12 மணிக்குள் முடிந்தது. மீண்டும் ஓர் உந்து வண்டி வந்து எங்களைத் திருவத்திபுரத்துக்கு அழைத்துக்கொண்டு போயிற்று.

திருவத்திபுரத்திற்குச் சென்றதும் உணவு கொண்டு சிறிது நேரம் ஓய்வு கொண்டோம். பிறகு சிலர் செய்யாற்றின் ஊறு நீரில் மூழ்கிவிட்டுக் குருக்களை அழைத்து வந்தனர். கோயில் வழிபாடு 4-மணிக்குள் முடிந்தது.

திருவோத்தூர் என்பது தேவாரப் பெயர். அதுவே திருவத்திபுரம் என மருவி வழங்குகிறது. கோயில் பெரிதாகவும் அழகாகவும் இருக்கிறது. ஊரில் தக்க அறிஞர்கள் இருக்கின்றனராயினும் நேரமின்மையால் நாங்கள் எங்கள் வழிபாட்டை 4-மணிக்குள் முடித்துக்கொண்டு மீண்டும் உந்து வண்டி ஏறி, வன்பார்த்தான் பனங்காட்டூரை அடைந்தோம்.

தென்னாட்டிலுள்ள மற்றொரு பனங்காட்டூரிலிருந்து பிரித்துக் காட்ட இவ்வூர் 'வன்பார்த்தான் பனங்காட்டூர்' என்று வழங்குகிறது. வன்பாக்கம் என்றொரு ஊர் பக்கத்தில் இருக்கிறதாம். பெரிய சாலையிலிருந்து வடக்கு நோக்கி அரை கல் தொலைவில் ஊர் இருக்கிறது. சிறிய அழகிய ஊர். நீர் நிறைந்த ஊருணி. அண்மையில் நாட்டுக் கோட்டைப் பெருமக்களால் பெரும் செலவில் திருப்பணி செய்யப்பட்டு மிகவும் அழகாகவுள்ள பெரிய கோயில். அகத்தியரும் புலத்தியரும் வழிபட்ட இரண்டு திருமுன்னிலைகள். மாலை $5-5\frac{1}{2}$ மணிக்கு ஊரைச் சேர்ந்தோம். உடனே திரும்பிவிட நினைத்தோம். ஊர்ப் பெரு[illegible]களில் இருவர் திரு. சபாபதி (பஞ்சாயத்துத் தலைவர்) திரு. மகாதேவபிள்ளை என்பவர்கள் வழியிலேயே நிறுத்தி வினவி எங்கள் பயணம் பற்றி அறிந்து கொண்டார்கள். ஆசிரியரை அவர்கள் முன்னரே ஓரளவு தெரிந்தவர்களாகவும் இருந்தார்கள். இனிமேல் காஞ்சிக்கு வண்டியில்லை என்றும் இருந்தே போக நேரும் என்றும் சொல்லி, உடன் வந்து கோயில் மணியக்காரர் திரு. நாராயண ஐயர் அவர்களுடன் கலந்து இரவு எங்களுக்கு உணவு வசதிகளைச் செய்யும்படி செய்து, எங்களைப் பக்கத்திலுள்ள ஒரு பெரிய சத்திரத்தில் தங்க வைத்தனர்.

நாங்கள் எங்கள் கடமைகளை முடித்துக்கொண்டு, ஊர்வலமாகப் பாராயணம் செய்து கொண்டு வந்தோம். கோயிலில் மாலை நேரம் வழிபாடு நடந்தது. வழிபாட்டை நன்முறையில் முடித்தோம். ஊர் மக்கள் சிலர் கூடியிருந்தனர். ஆசிரியர் சிறிது நேரம் பேசினார். திரு. N. சாரங்கபாணி நாயுடு என்னும் அன்பர் இசையோடு தேவாரம் பாடினார். தமிழ் வல்ல கோயில் மணியக்காரர் திரு. நாராயண ஐயர் அவர்கள், ஆசிரியரைப் பற்றித் தாம் முன்னரே கேள்விப்பட்டிருப்பதாகவும் இந்தக் காலத்தில் இம்மாதிரி ஆண்களும் பெண்களுமாக அன்பர் பலர் உடன்வர அவர்கள் சமயாசிரியர்களைப்போலத் தல யாத்திரை செய்வது பெரிதும் பாராட்டப்பட வேண்டிய செயல் என்றும் சிறப்பித்து இறுதியில் சிறிது நேரம் பேசினார்.

சத்திரத்தில் எங்களுக்கு [illegible] அளவு சுவை மிக்க '[illegible]' வழங்கப்பட்டது. சிறந்த [illegible]கிகள் செய்

இருந்தும், மேலும் பற்பல வசதிகள் செய்ய முடியாமைக்கு மேற்குறிப்பிட்ட ஐயர் அவர்களும் மற்ற அன்பர்களும் வருத்தம் தெரிவித்துக் கொண்டனர். எங்களில் திருவாளர் பி.வி.குப்புசாமி அவர்கள், ஊரவர் உதவியுடன் பால் தருவித்து எல்லோருக்கும் வழங்கினர்.

வசதி மிக்க அச் சத்திரத்தில் திருமந்திர விளக்கத்தை ஆசிரியர் அவர்கள் சொல்லத், திருமதி நிலவம்மை அன்றிரவு நெடுநேரம் எழுதிக்கொண்டிருந்தார்கள்.

பனங்காட்டூரில் உள்ள சிறப்புகளை, மேலே குறிப்பிட்ட பெரியோர்கள் சொன்னார்கள். அவற்றுள் இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது நால்வர்கள் பெயரால் அங்கே நான்கு தீர்த்தங்கள் இருப்பதே. பெரிய சாலைக்குச் செல்லும் வழியில் நாங்கள் சுந்தரர் தீர்த்தத்தைப் பார்த்தோம்.

சுற்றியும் சரிந்து செல்லும் பெரிய நிலப்பரப்புக்கு இடையில் வயல் வரப்பு போன்ற ஒரு மேட்டிடத்தில் ஒரு சிறு ஊற்றுக் கண்! அதிலிருந்து எந்தக் காலத்திலும் நீர் ஊறிக்கொண்டே இருக்கிறதாம். மணலைச் சிறிது பறித்தால் நீர் ஊறி ஓடுகிறது. எவ்வளவு ஆழமாக மணலைப் பறித்தாலும் ஓர் அளவான நீரே ஊறுவதும், ஆழமான கிணறுகளிலும் பக்கங்களில் நீர் இல்லாதபோது கூட அந்த மேட்டிடத்தில் மட்டும் தெளிந்த நீர் ஊறி வருவதும் வியப்பாகவே இருக்கின்றன. சுந்தரர் கட்டுச்சோறு உண்ட இடம் என்று அவ்விடத்தைப் பற்றி வழங்குகின்றனர்.

மறுநாள் (25- 6- 52) காலையில் எழுந்து, சிலர் குறுக்கு வழியில் நடந்தும், சிலர் உந்து வண்டியில் ஏறியும் (எல்லாருக்கும் ஒரு சேர வண்டியில் இடம் கிடைக்காமையின்) காஞ்சிபுரத்தை அடைந்தோம்.

மொழித் துறை

உணர்வு வெற்றி!

நம் குருகுல ஆசிரியர் 7-3-53 முதல் 10-3-53 வரை உண்ணா நோன்பு மேற்கொண்டிருந்தார். தன்னலத்திற்காக உழைப்பதைக் காட்டிலும், பிறர் நலத்திற்காக உழைத்தால், நிறைந்த பேறு வரும் என்பதை இன்று யான் உணர்ந்தேன். மாகாணப் பிரிவினை தோன்றும் இந்த நேரத்தில் நம் ஆசிரியர், தமிழ் மொழி, தமிழ் நாடு, தமிழ் மக்களின் நீதியான உரிமைக்காகத் தவ நோக்குடன் உண்ணா நோன்பு மேற்கொண்டார். "உடல் உழைப்பினும் ஆன்மவலியே வெல்லும்" என்ற காந்தியடிகளின் மணிமொழி நமக்குச் சிறந்த வழிகாட்டியாய் இருக்கிறது. கருத்தினால் பாவனை செய்வதுதான் சிறந்தது; அது உடனே பயனளிக்கும் என்பதை நம் ஆசிரியர் வாயிலாக இன்று யான் அறிந்தேன்.

"புணர்ச்சி பழகுதல்
வேண்டாம், உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்"

என்று கூறிய வள்ளுவர் மொழிக்கு இயைய ஆசிரியரின் உணர்வு மிகவும் நன்றாய் இயங்கியிருக்கின்றது. இன்று நான் ஒரு வெற்றியைச் செய்தித்தாளில் கண்டேன். "சென்னையில் ஆந்திரத் தலைநகர் தற்காலிகமாகவும் இராது; இந்திய சர்க்கார் முடிவான தீர்மானம்; இது தமிழரின் முதல் வெற்றி" என்று 'பாரத தேவி' யில் (20-3-53) கண்டேன். உடனே நம் ஆசிரியர் உண்ணா நோன்பும் என் அகத்தில் தோன்றிற்று. உடனே எல்லையில்லா மகிழ்ச்சியாக இருந்தது.

திருவள்ளுவர் செயலகமாகக் குருகுலத்தை ஆக்கவேண்டும் என்று கூறிய நம் ஆசிரியரின் வாக்கு இன்றே நிறைவேறி விட்டதைப் போன்று எண்ணிற்று என் உள்ளம். கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்புப் போல நம் ஆசிரியரின் உணர்ச்சி பாவனை நம் தமிழ் நாட்டிற்கு ஒரு தூண்டுகோல்!

ஆகையால், தமிழன்பர்களாகிய நாம் எல்லோரும், உடலால் உழைப்பதைக் காட்டிலும் உணர்வினால் கருத்தை மற்றவர் உள்ளத்தில் பதியும்படி உணர்வியக்கம் செய்யவேண்டும். தமிழ் நாடு செழிக்க, தமிழ் மொழி வளர, தமிழ் மக்கள் ஓங்க, ஆசிரியர் நமக்கு மேலுமேலும் வழிகாட்டுவார் என நம்புகின்றேன்.

—நிலவு.

:—○—:

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ. ச. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். ([illegible])